கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 40
ஐப்பசி 21 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## 23-ம் அருளப்ப பாப்பரசரின் ஜனனபதி யாத்திரைத் தலமாகிவிட்டது

23-ம் அருளப்ப பாப்பரசர் 1963-ம் ஆண்டு இறைவனடி அடைந்தபின் அவர் ஜனனபதியாகிய சோட்டோ இல்மொன்ரே என்னும் வட இத்தாலிய மலைப்பாக குக்கிராமம் ஒரு திரு யாத்திரைத் தலமாகிவிட்டது. அன்று தொடக்கம் இன்று வரையும் வெகு திரளான யாத்திரிகர்கள் அக்கிராமத்துக்கு விஜயம் செய்திருக்கின்றனர். இவர்கள் இப்பிரயாணத்தை உல்காசப்பிரயாணமாக மாத்திரம் கருதி அங்கு சென்றனரல்லர். 23-ம் அருளப்ப பாப்பரசரில் இவர்களுக்குள்ள மதிப்பே இவர்களை அங்கு இட்டுச் சென்றுள்ளது. 23-ம் அருளப்பர் பிறந்த வறிய இல்லமும், அவர் சிறுபாராயத்தில் திருவழிபாடுசெய்த சிற்றாலயமும் பிரயாணிகளின் விசேஷ கவனத்தைப் பெற்றுக்கொள்கின்றன. அவரது சகோதரருள் இன்று சீவந்தராயிருக்கும் சவெரியோ றொன்காலி பிரயாணிகளுடன் அவரது குடும்பத்துக்கு இயற்கையாக உள்ள குதூகலத்துடன் அளவளாவி வருகின்றார். பிரயாணிகளின் போக்குவரவால் இக்கிராமம் துரிதமாய் முன்னேறி வருகின்றது.

# மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு பரி. தந்தைதரும் செய்தியிலிருந்து

**இவ்வருட தினத்தின் சிறப்பு:**

ஐப்பசி மாதம் 22-ம் திகதி அகில உலக கத்தோலிக்கரும் இவ்வருடம் கொண்டாடுகின்ற மிஷன் ஞாயிறு தினம் இம்முறை ஒருவிசேஷ தினமாகும். வேதப்பரப்புதல் வேலையில் பலவருடகாலமாக ஈடுபட்டிருக்கும் மூன்று புனித நிறுவனங்களின் யூபிலிதினம் இவ்வருடம் நிறைவு பெறுகின்றது. 350 வருடகாலங்களின்முன் பரி. தந்தை 15-ம் கிறகோரியார் பாப்பரசர் பலசங்நியாசசபைகளும் தமக்கியன்றவாறு ஆற்றிவந்த இவ்வேலையை ஒருமுகப்படுத்தி ஊக்கமளிக்க வேதப்பரப்புதல்சபையை 1622-ம்ஆண்டு நிறுவலானர். அதன் பயனாக உலகிலே தோன்றிய முயற்சிகளில் தலைசிறந்ததாக பிரான்சுதேசத்தில் பௌலின் ஜெறிக்கட் என்னும் அந்நாட்டுமாது ஒருவர் 150 வருடங்களுக்கு முன் 1822-ம் ஆண்டுலையன்ஸ் நகரில் நிலைநாட்டிய வேதப்பரப்புதல்சங்கம் உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அதன் செபதபதானங்களினால் விளங்கலாயிற்று. பின்னர் இன்று 50 வருடங்களுக்குமுன் வேதப்பரப்புதல்சபையை பாப்பரசரின் விசேஷ பரிபாலன நிறுவனங்களில் ஒன்றாக 11-ம் பத்திநாத பாப்பரசர் 1922-ம் ஆண்டு பிரகடனம் செய்துள்ளார். ஆகவே இவ்வருட மிஷன் ஞாயிறு தினம் இம்மூன்று யூபிலி வைபவங்களினாலும் சிறப்புற்று விளங்குகின்றது.

**பாப்பரசரின் நிருபம்:**

பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் இவ்வருடம் வரும் இத்தினத்தின் விசேஷ சிறப்பை உலகுக்கு எடுத்துக்காட்டி, மிஷன்ஞாயிறு தினவேலையின் அவசியத்தையும் அதில் சகல கத்தோலிக்கரும் பங்குபெற வேண்டிய காரணத்தையும் விளக்கி, குருமார், சந்நியாசிகள், கன்னியர்கள் மாத்திரமின்றி பொதுநிலைமக்கள் யாவரும் இதில் ஆவலோடு பங்குகொள்ளுமாறு கேட்டிருக்கின்றார். இவ்வருடம் நடைபெறஇருக்கும் மிஷன் ஞாயிறு தினம் உலக கத்தோலிக்கர் யாவரையும் வேதப்பரப்புதல் வேலையிலுள்ள தத்தம் கடமையை நன்கு உணரச்செய்ய வேண்டுமென்பதே பாப்பரசர் சின்னப்பரின் நிருபத்தின் நோக்கமாகும். கத்தோலிக்க பொதுநிலை மக்களுட் சிலர் வேதம் போதிக்கும் வேலை மேற்றிராணிமார், குருமார் சந்நியாசிகள் கன்னியருக்கு உரியது என்ற தப்பபிப்பிராயமுடையவர்களாய் அதில் கலந்துகொள்ளாதிருக்கின்றனர். வேதத்தை உலகத்தின் சகல திசைகளிலும் போதிக்கும் கட்டளை யேசுக்கிறீஸ்துநாதரால் முழுத்திருச்சபைக்குமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. பொதுநிலைமக்களும் திருச்சபையின் ஒரு அம்சமாவரன்றோ? குருமார் முதலியோர்வேதபோதகவேலையில்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## வில்லெபிறுன்ட் அடிகளாரின் இங்கிலாந்து விஜயம்

வத்திக்கான் ஒற்றுமை இயக்கக் காரியாலய தலைவர் கருதினல் வில்லெ பிறுன்ட் அடிகளார் பலவாரங்களுக்கு முன் திட்டமிட்டிருந்தது போல இம்மாசம் 3-ம் திகதி தொடக்கம் 6-ம் திகதிவரையும் ஆங்கில கிறீஸ்தவசபைத் தலைவர் றம்சே அடிகளாரின் விசேஷ விருந்தினராக இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். றம்சே அடிகளாருடன் தங்கியிருந்த நாட்களில் அவர் வசித்துவரும் லம்பெத் மாளிகையில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அத்திருப்பலியின்போது றம்சேஅடிகளாரும் அவரது பாரியாரும் சமுகம் கொடுத்திருந்தனர். கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமைப் பாதையிலிருக்கும் விசேஷ தடைகளை நேரில் ஆராய்வதே இவ்விஜயத்தின் பிரதான நோக்கமாகும் இரு சபைகளின் போதனைகளை ஒருமுகப்படுத்துவதே முக்கியபிரச்சினையாகும். மறுகருமங்களில் இருசபைகளும் தத்தம் பாரம்பரியங்களுடன் தொடர்ந்து விளங்கிவர வழி வகுக்கப்படுவது கடினமன்று என்பதே பொது அபிப்பிராயமாகும்.

## மாதர் நிலைபற்றிக் கவலையில்லையா?

அண்மையில் ஆங்கிலநாட்டில் போக்ஸ்ரன் பட்டணத்தில் நடந்த கத்தோலிக்க பெண்களின் தேசிய சங்கக் கூட்டத்தில் 700 பிரதிநிதிகள் பங்குபெற்றனர். அச்சமயம் கத்தோலிக்க பெண்களின் தேசிய சபைத்தலைவி திருமதி மேறிபைன் அம்மையார் திருச்சபையில் பெண்களின் நிலைமையில் திருத்தங்கள் மேலும் ஏற்படாதது பற்றிக் கவலை தெரிவித்தார். இறுதியாக வத்திக்கானில் நடந்த ஆயர் சினொட் கூட்டத்தில் பெண்களின் நிலைமையை ஆராய ஒரு விசாரணைக்குழு நியமிப்பதாக வாக்குப் பண்ணப்பட்டதையும் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பாசரே அச்சபையில் திருமதி பார்பரா வாட் செய்த உருக்கமான சொற்பொழிவின்பின் உரையாற்றுகையில் அத்தகைய பெண்களின் ஆற்றல்கள் வீண்போகாது உபயோகப்பட வழிவகைகள் ஆராயப்படவேண்டுமெனக் கூறியதையும் சுட்டிக்காட்டி ஆங்கிலநாட்டு ஆயர்சபையின கவனத்துக்கு இதைச்சமர்ப்பித்தார்.

# இந்நாட்டுப் பாஷைப் பிரச்சினை தீரச் சகோதரத்துவ உணர்ச்சியே வழி

தர்மதீபமென கூறப்பட்டு வரும் எமது நாட்டில், நாலு பெரும் சமயங்களாகிய பௌத்தம், சைவம், இஸ்லாமியம், கிறீஸ்தவம் வேரூன்றி இருக்கும் இப்புண்ணிய பூமியில், இரு பெரும் சமூகங்களாகிய சிங்கள தமிழ் பிரிவுகளுக்கிடையில் தோன்றியிருக்கும் பாஷைப் பிரச்சினையை சகோதரத்துவ உணர்ச்சி மூலமாயன்றி வேறு வகைகளில் தீர்த்துவைக்க முடியாதென சிறிலங்கா காந்திய நம்பிக்கை இயக்கத்தினர் எடுத்துக்காட்டி சமரசமுயற்சிகளைக் கையாள இரு பெரு சமூகத் தலைவர்களுக்கு யோசனை ஊட்டி வருகின்றனர். வாழ்க்கை முறைகளில் பயனளிக்காத சமய அனுசாரங்களினால் உள்ள நன்மை யாது என அவர்கள் இந்நாட்டு மக்கள் யாவரையும், கேட்டு சகோதரத்துவ உணர்ச்சியுடன் பிரச்சினைகளை ஆராய இரு சமூக தலைவர்களும் பங்குபெறக்கூடிய ஒரு வட்ட மேசை மகாநாடு நடைபெற முயற்சிக்கின்றனர். இந்த நோக்கத்துடன் பிரதம மந்திரி அவர்களுடனும் தமிழ் ஐக்கிய முன்னணித் தலைவர்களுடனும் தொடர்புகொண்டிருக்கின்றனர்.

## ஆங்கில பிரதமமந்திரி ஹீத் பாப்பரசரைத் தரிசித்தார்

இருவாரங்களின்முன் ஆங்கிலநாட்டுப் பிரதம மந்திரி ஹீத் அவர்கள் இத்தாலிக்கு விஜயம் செய்தபோது வத்திக்கானுக்கும் சென்று பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைத் தரிசித்தார். இதுவே இவர் பாப்பரசருக்கு உத்தியோகபான்மையில் அளித்த முதல் விஜயமாகும். இந்த விஜயத்தின் போது விசேஷமாக வட அயர்லாந்து நிலைமை பற்றியும், யூகன்டா நிலைமைபற்றியும் இருவரும் கலந்து ஆலோசித்ததாகவும், பிரதமர் வட அயர்லாந்து விஷயமாகப் பாப்பரசரின் உதவியை நாடி நிற்பதாகவும் கூறப்பட்டது

## கருதினல் விலோ அடிகளாரின் பாராட்டு

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரின் சார்பில் அவர் காரியதரிசிக்கருதினல் விலோ அடிகளார் ஆபிரிக்க கருதினலும் அப்பகுதி ஆயர் சபையின் தலைவருமாகிய கருதினல் பெயில் சூன்கிறுனு அடிகளாருக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் அவர்கள் ஆபிரிக்க் பொதுநிலைமக்களுக்கு வேதகருமங்களில் அளித்திருக்கும் நிலைமையைப் பெரிதும் பாராட்டி அது பிறபகுதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது எனக் கூறியிருக்கின்றார். "திருச்சபையில் சகல மட்டங்களிலும் பொதுநிலையாளருக்கு அளி[illegible]டிருக்கும் மதிப்புள்ள நிலைமையையுப, அவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளுக்கு அதிகாரிகள் செவிசாய்க்கும் தன்மையையும், அவர்களது போக்கை வழிப்படுத்தும் ஆர்வத்தையும், பிரச்சினைகளின் தன்மைக்குத்தக அவை வரிசை பெறுவதையும் நாம் அறிய வரும் போது பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பொதுநிலையாளரில் ஆண்களும் பெண்களும் வெறும் அவதானிகளாய் மாத்திரமாயிராது, முடிவுகள் செய்வதில் விசேஷ பங்கு உடையவர்களாயிருப்பது கண்டு அகம்பூரிக்கிறோம்" [illegible] என அவர் கூறியிருக்கின்றார்.

## பாப்பரசரின் செல்லப் பசுங்கிளி

12ஆம் பத்திநாத பாப்பானவர் தமது நீடிய ஆட்சி காலத்திலே வத்திக்கான் மாளிகையில் பாடும் பட்சிகளின் பாரியகூடம் ஒன்றைக் கொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து சின்னப்ப பாப்பரசரும் அத்தகைய பட்சிகளை கொண்டிருப்பதில் இப்பொழுது நாட்டம்கொள்ளத் தொடங்கியிருக்கின்றார். ரோமை நகரிலிருந்து 20 மைல் தூரத்திலே அல்பான் குன்றுகளில் அமைந்துள்ள தமது வேனிற்கால வாசஸ்தலத்திற்குச் சமீபத்திலே அவருடன் சென்ற குழுவில் பசுங்கிளி ஒன்றும் அடங்கியிருந்தது. இந்தக்கிளி அவருடைய படிப்பகத்தின் கீழுள்ள மேல்மாடிச் சாளர மேடையிலே ஒரு கூண்டில் வைக்கப்பட்டிருந்தது. பாப்பரசரின் உணவுகளைச் சமையல் செய்கின்ற கன்னியாஸ்திரிமார் மூவரும் அதனைக் கண்காணித்து வேதாகமத்திலுள்ள சில சுலோகங்களைச் சொல்ல அதனைப்பயிற்றி வந்தனர். இந்தக் கிளி தினமும் ஒரு குறித்த நேரத்திற் கூண்டைவிட்டு வெளிகொண்டு 40 நிமிஷம்வரை வெளியே தங்கிவிட்டுப் பின்னர்சரியாய் அதே நேரத்தில் திரும்பிவந்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பீரங்கிக் குண்டுகளுக்குமுன் மனிதன் ஒருவேளை அசையாமல் நிற்கக்கூடும். ஆனால், அன்புகனிந்த சொற்களின் முன்பு அவன் பின்னடையத்தான் வேண்டியிருக்கிறது.
>
> — காண்டேகர்

## சத்தியவேத பாதுகாவலன்

### வருடத்தில் ஒரு நாள்

"சகல சாதிசனங்களுக்கும் நற்செய்தியைச் சென்று போதியுங்கள்"என்று கிறிஸ்துநாதர் கூறினர். இக் குரலொலிக்குச் செவிசாய்த்தே ஆயிரக்கணக்கான வேதபோதகர்களும், கன்னியர்களும் தமது வீட்டையும் நாட்டையும் துறந்து, கண்காணாத தொலைதூரங்களுக்குச் சென்றிருக்கின்றனர். ஆனால் இவர்கள் கத்தோலிக்க சனத்தொகையில் ஒருசிறு வீதத்தினரே ஆவர். கிறிஸ்து தம்மைப் பின்பற்றுவோரில் நற்செய்தியைப் போதிக்குமாறு ஒரு சிலருக்கு மட்டும் கட்டளை கொடுக்கவில்லை. பொதுவாக எல்லோருக்குமே கொடுக்கப்பட்ட கட்டளைதான் அது. கிறிஸ்துநாதரைப் பிறருக்கு அறிவிக்கும் கடமை கிறிஸ்தவனாய்ப்பிறந்த ஒவ்வொருவனுக்கும் உண்டு. இதுஓர் அடிப்படைக் கடமை, மேலதிக சேவை அல்ல. கிறிஸ்தவர்கள் அனைவரும் போதிக்க வேண்டியவர்கள். போதிக்கக் கடமைப்பட்டுள்ளவர்கள். மௌனமாய் இருப்பது தவறு.

ஆனால், போதனை பல்வேறு வகைகளில் செய்யப்படலாம். கிறிஸ்தவர் தமது கடமையை நிறைவேற்றும் வழிவகைகளைப் பாப்பரசரே தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ உண்மைகளைப் போதிப்பதாலும், அவற்றைக் குறித்து எழுதுவதாலும் உடலுழைப்பையும், நேரத்தையும் இப்பணிக்கு அளிப்பதாலும், நிதியுதவி புரிவதாலும் ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலுக்கேற்றவண்ணம் மறைபரப்பும் பணியில் பங்குகொள்ளலாம். ஆனால் எல்லோருமே தமது செபங்களை, தமது வருத்தங்களை, தமது இன்பதுன்பங்களை இக்கருத்துக்காக ஒப்புக்கொடுக்க முடியும்.

சமீபகாலத்தில் மறைபரப்பும் பணியில் மக்களுடைய ஆர்வம் குன்றிவருவது கண்கூடு. இது அவசியம்தானாஎன்று சிந்திக்கும் அளவுக்கு அவர்களின் மனோநிலை மாறியிருக்கிறது. இதற்குப் பலகாரணங்கள் இருக்கக்கூடும். வத்திக்கான் திருச்சங்கத்தின் விளைவாகக் கத்தோலிக்க சமயத்துக்கும், பிறமதங்களுக்கு மிடையேயுள்ள தொடர்பு வேறுபட்டிருக்கிறது. மதசுதந்திரம்பற்றிய பிரகடனம், பிறமதங்களிலுள்ள உண்மைகளையும் நன்மைகளையும் திருச்சபை ஏற்றுக்கொண்டமை முதலியன. திருச்சபைக்கு வெளியே இருப்பவருக்கும் ஈடேற்றம் கிடைக்கலாம்; அதனால் அவரை ஏன் மனந்திருப்ப வேண்டுமென்று பலரை நினைக்கத்தூண்டுகின்றன.

இதில் நாம் ஒன்றை மறந்துவிடலாகாது. பிறரை மனந்திருப்புவது எமதுவேலை அன்று. அது இறைவனின் செயல். அவர் தாம் விரும்பியவர்களுக்கு அந்தஅழைத்தலைக் கொடுக்கிறார். அதற்கு வழிசெய்வதுதான் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணி. அதை நாம் தட்டிக்கழிக்க முடியாது.

வருடத்தில் ஒருமுறைவரும் மறைபரப்புஞாயிறு தினத்துடன் இக்கடமை முடிந்துவிடாது. வருடத்தில் ஒருநாள்தான் இக்கடமை நினைவூட்டப்படுவதால் மற்றநாட்களில் வேதபோதக கருத்துக்களை மறந்துவாழலாமென்பது பொருளல்ல. இன்றையதினம் வருடமுழுவதும் மேற்கொண்ட பணியின் உச்சநிலையாக இருக்கவேண்டும். கிறிஸ்துவை அறிவிப்பது எமது சுவாசத்தையும், இரத்த ஓட்டத்தையும் போல் இயற்கையான ஒரு பண்பாக அமையவேண்டும்.

### கன்னியாஸ்திரியின் அதிசய வாழ்க்கை

செவிடு–அதனால் கேள்வியின்மை, பேச்சின்மை–அதாவது மௌனம், அறியப்படாமை–அதாவது மறைந்த வாழ்க்கை ஆதியாம் குறைபாடுகள் இருந்த போதிலும் அவைகளையெல்லாம் மேற்கொண்டு பரலோக பாதையில் வழிநடந்து முத்தியின் கரைசேர்ந்து மற்றும் புனிதர்கள் மத்தியில் ஒரு புனிதவதியாக மிளிர்கின்ருள் புனித தெரேஸ் குடேர்க் அம்மாள். வேணும் வேண்டாம் தன்னந்தனிமையாய் இருக்க வேண்டிய நிலைமை, நீடியகால சோதனை, அதனால் நெடுகொள்பட்ட வேதனையில் காட்டிவந்த பொறுமை, விடாமுயற்சி ஆகியவற்றுடன்கூடிய அவளுடைய துறவறவாழ்க்கை — பெரும்பாரமான சிலுவையுடன் கூடிய அவளுடைய பிரமிக்கத்தகும் வீரத்துவ வாழ்க்கை ஆகியன அவள் சாங்கோபாங்கத்தின் கொடுமுடியை அடையச் செய்தன. அதனால் இன்றைய உலகின் சப்தம் சந்தடிகளாலும், அவற்றின் பயங்கர விளைவுகளாலும் வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களுக்குள்ளாய்த் தவிக்கும் லட்சக்கணக்கான செவிடர்களுக்கு ஓர் ஆறுதல் உண்டுபண்ணுமுகமாக அவளை அவர்களின் பாதுகாவலாளியாகப் பிரகடனஞ் செய்யவேண்டுமென்ற ஓர் எழுச்சி இப்பொழுது உண்டாயிருக்கிறது.

# ஜெயமளிக்கும் செபமாலை

பூவுலகில் வாழும் மாந்தர் யாவர்க்கும் ஓர் அன்னை செபமாலை அன்னை. அந்த அருமையான மரியன்னை, அனைவரும் வான்பதியை வந்தடையும் வண்ணம், உலகினுக்கு உவந்தளித்த மாலைதான மகிமையுறும் செபமாலை. இரட்சணியத்தை இலகுவில் அடையப்பண்ணும் 'ரோஜாமலர் மாலை.' மரியன்னையின் மலர்ப் பாதங்களில், மக்கள் செப, தவ, ஒறுத்தல், உபவாசங்களைப் புரிந்து மாதாவின் மகிமையைப் புகழ்ந்து, பரம இரகசியங்களை நினைந்து சாற்றும்மாலை. புண்ணியப் பயிர்கள் ஆக்கும் மாலை. ஐம்பத்து மூன்று மணிச் செபங்களை அருந்தவ முயற்சியுடன் செபிப்பவர்க்கு அருளுறு நற்பயன் அளிக்கும் மாலை. புனித சாமிநாதர் பதிதர்களை வென்று ஜெயமடையப் பயன் தந்தமாலை.

தேவ அன்னையின் மக்கள் தேவ ஆலயங்களிலும், குடும்ப மனைகளிலும் பக்தி பரவசந் துளிர்க்கத் தன்னந்தனியாய்ப் பலருடன் துணையாய் நாள்தோறும் செபமாலை செபித்து அடைந்துள்ள நன்மைகளோ பல. பாப்பரசர் அளித்திட்ட பரிபூரண பலன்களை, செபமாலையைப்பயபக்தியுடன் செபித்துப் பலன்பெறச் சிற்சில முறைகளும் உள. துன்பங்களிலும், துயரங்களிலும், தீய அலகையின் தந்திர சோதனைகளிலும் பகைவருடன் போர்பொருதிப் பெலமருகிப் போகும் பொழுதினிலும் செபமாலையைச் செபித்தமையால் அதிசயமும் வெற்றியும் பயனும் அளிக்கநிகழ்ந்த புதுமைகள் பல. பாவ வழியகன்று தூயவழிநாட பரமனை மறந்து, புரிந்த பாவந்தீர, நாளிலும் பொழுதிலும் செபமாலை அன்னையில் நம்பிக்கை வைத்து, செபமாலை செபித்து நலலோராய், இஷ்டப்பிரசாத நிலையெய்தி ஞான நெறியில நடந்து வருவோர் பலர். வனவாசம் புரிந்து மாதாவின் செபமாலையைப் பக்தியுடன் ஓதிபதால், அவர் அருள் பரந்து, அகனற் தம்மையே மறந்து, மோட்ச பேரின்ப ஆசையில்

**ஆசிரியர் F. S. C. வங்காலை**

மிகுந்து, வந்ததபசிகள் பலர். தாவீதின் நூற்றைம்பது சங்கீதங்களின் வழியாய்த் திருச்சபையின் ஒழுங்கு முறை பிறழாது, இவ் வாழ்க்கை வாழ்ந்து, தேவஇரகசியங்களைத் தியானித்துத் தாணியில் ஞான நன்மைகளை அடைந்தோர் பலர்.

தேவ அன்னை லூர்துபதியிற் பெர்னதேத் எனும் பெண்மணிக்குப் பேரருள் ஈந்து அவர் பேரும் சீரும் யாரும் கூறச் செய்கையில் இரத்தினமாலை ஏந்திச் செபித்தார்; இன்னும் இந்தப் புண்ணிய யாத்திரைத் தலத்தில் ஒன்றுகூடி உத்தம முறையிற் பக்தியாய்ச் செபமாலையைச் செபித்துத் தேவதாயின் அருளையும், இகபர நன்மைகளையும் அடைந்துவரும் பக்தர்களின் தொகையைப் பகர்ந்திட முடியுமோ?

பாத்திமா எனும் புண்ணிய பூமியில் மூன்று சிறார்க்கு முத்தனைய மணிகோர்த்த செபமாலை வலதுகரத்தேந்தித் தேவ அன்னை திருக்காட்சி அளித்தார்; "முத்திநகர் அடைய, நீங்கள் பக்தியுடன் எனது செபமாலையைச் செபித்தல் வேண்டும்; அடிக்கடி செபித்தல் வேண்டும் என்றும், ஓ! என் யேசுவே...என்ற சிறு செபத்தையும் சேர்த்து செபமாலையை ஓதும் நன்முறை பகர்ந்து இவ்வாறு செபமாலையைப் பக்தியுடன் செபித்தால் யுத்த நிறுத்தம் விரைவில் ஏற்படும்" என்றும், தேவ அன்னை நன்மொழிகள் நவின்றார். பாத்திமா என்னும் நற்சேத்திரம் பாரினில் தேவதாயின் பக்தர்களால் நிறைந்து இலங்குகின்றது.

"மரியாயின் செபமாலை மக்களுக்கு அடைக்கலமும் மேன்மைதரும் ஞானமும் அளிக்கும்; செபமாலை நரகத்தை எதிர்க்க ஏற்றகேடயம்; அது அக்கிரமத்தை அழித்து, பாவத்தினின்று விடுதலை அளித்து, அஞ்ஞானத்தைப் போக்கி, புண்ணியக்கிரியைகள் விளையச்செய்யும்; இறைவனின் இரக்கப் பெருக்கத்தை ஆன்மாக்களுக்கு அடைந்துகொடுத்து மனித இருதயங்களில் உலகப்பற்றுதலை ஒழித்து தேவசினேகத்தை நிலைநிறுத்தி நிலைபான மோட்ச பேரின்ப நினைவின் ஆசையைத் தூண்டி விடுவதில் மாதாவின் செபமாலை மிக்க வல்லமையுடையது; மானிடர் செபமாலை மூலம் தம்மை பரிசுத்தப்படுத்தித் தேவ அன்னையில் நம்பிக்கை வைத்திருந்தால், ஒருபோதும் கேடுற மாட்டார்; தியானத்துடன் செபமாலையை ஓதுவதினால் இடையூறுகள் அகன்று விடுவதன்றி, அகால மரணமும் ஒருபோதும் ஏற்படாது; பாவிகள் மனந்திருப்புவர்; தருமவாளர் தேவஅருள் நிறைந்து நித்திய சீவியத்திற்குப் பாத்திரராவர்; செபமாலையில் உண்மையான பக்தியுள்ளவர்கள் மரணநேரத்திற் திருச்சபையின் உதவிகளாய திருவருட் சாதனங்களைப்பெற்றுத் தேவ இஷ்டப்பிரசாதங்களை அடைவர்; மாதாவின் செபமாலையை ஓதுவோர் சீவியத்திலும் மரணத்திலும் ஞானவெளிச்சமும், சர்ப்பூரண வரப்பிரசாதமும், சுத்தவாளருடைய பேறுகளின் பங்கும் அடைவர். செபமாலைப் பக்தியுடையவர்கள், உத்தரிப்பு வேதனையால் மீட்கப்பட்டுக் கூடியவிரைவில் மோட்ச கதியை அடைவர்; மாதாவின் செபமாலை செபிக்கும் உண்மையான மக்கள் மோட்சத்தில் அதிக மகிமையை அடைவர்" என்ற இன்னோரன்ன சுகிர்த வாக்கியங்கள், புனித சாமிநாதர் சபையைச்சேர்ந்த புனித அலென் டெலாரோச் என்பவரது எழுத்துக்களிற் காணப்படுகின்றன.

வானுயர் சோலைசூழும் வனவிலங்குகள் வாழும் மருதமடுத்திருப்பதியிற் திருக்கோவில் கொண்டு கருணைமழை பொழியும் செபமாலைமாதா, அங்கண் அவரது பக்தர்கள் மீது தலையநிறைந்து அருள் சொரிந்து வருகின்றார்; அவ்வன்னையின் ஆலயம் நாடி வருட உற்சவம் கொண்டாடி அவரது அருட்கொடையின் குளிர்நிழலமர்ந்து அருள்வாங்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கன்னியாஸ்திரி திருமுழுக்காட்டிய குழந்தை

லிவர்ப்பூல் நகரிலே புனித அகுஸ்தீனார்சபைக் கன்னியாஸ்திரிமாரால் அங்கு "பாக்ஹவுஸ்" பிரசவவிடுதியில் இற்றைக்கு 24 வருடங்களுக்கு முன் பிறந்த ஒரு குழந்தை பிராணபத்துக்குரிய நிலைமையில் பிராணவாயுப் பேழை ஒன்றில் வளர்த்தப்பட்டிருந்தது. அதன் அபாய நிலையை அவதானித்த சங். மொனிக்கா என்ற கன்னியாஸ்திரி அது பிறந்த சில மணி நேரத்தில் அதற்கு ஞானஸ்நானம் அருளினார். இந்தக் குழந்தை தேவாதீனமாக உயிர்பிழைத்தது. தனது 24ஆம் வயதை அடைந்தது. அன்று சனிக்கிழமை அங்குள்ள சம்பேதுரு, சம்பாவிலு கோவிலிலே குருப்பட்டம் பெற்றுக்கொண்ட வண. மிக்கேல் கசிடி சுவாமியாரே அந்தக் குழந்தையாவர். குருப்பட்ட திருவைபவத்தின்போது அவருடைய தாயாரான திருமதி ஜேன் கசிடியுடன் அப்பொழுது அவரைத் திருமுழுக்காட்டிய சங். மொனிக்காகன்னியாஸ்திரியும் கோவிலிலே அக்கபக்கமாக அமர்ந்திருந்து அவர் கரத்தால் முதன் முதலாகத் திவ்விய நன்மையும் முதல் ஆசீர்வாதமும் பெற்று ஆனந்த பாஷ்பம் சொரிந்து நின்றார்கள்.

### தேவதாயார் பக்திக்கு சுவிசேஷம்போதும்

குடும்பச் செபமாலைப் பக்தியை உலகமெங்கும் பரப்புவதில் மிக ஆர்வம் நிறைந்தவராகிய வண. பெயிற்றன் சுவாமியார் அண்மையில் பத்திரிகையாளருடன் உரையாடுகையில் தேவதாயாரைப் பற்றிய குறிப்புகளுக்கும், அவரைப்பற்றிக் கிறீஸ்தவர்கள் அறிந்திருக்க வேண்டிய உண்மைகளுக்கும் நாம் சுவிசேஷ வரலாற்றுக்கப்பால் ஏடுகளைப் புரட்டத் தேவையில்லையெனக் கூறினர். எனினும், தாயார் அளித்த பல்வேறு காட்சிகளும், பல இடங்களிலும் நடந்துவரும் அற்புதங்களும் இலேசாக மறுக்க முடியாதனவாயினும் அவை எமது விசுவாசத்துக்கு இன்றியமையாதன வல்ல என்று எடுத்துரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டிய அறையில்.....

எம். ஜோர்ஜ் ராஜேந்திரன்,
புனித சவேரியார் கல்லூரி, நுவரெலியா.

குளிரால் என் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது காற்று என் உடலில் படும்பொழுது ஊசிகளால் குத்துவதைப் போலிருந்தது. கீழே வெறும் தரையில் உட்கார்ந்திருந்ததால என்னுடைய முதுகுப்புறம் குளிரால் விறைத்து அசைவதற்குக்கூட முடியாமலிருந்தது.

நான் இரவு எட்டுமணி முதல் இந்த இடத்திலேயே உட்கார்ந்திருக்கிறேன். நான் உட்கார்ந்திருக்குமிடம் ஒரு கடையின் வாயிற்புறம். கடையை மூடும்வரை பார்த்துக் கொண்டிருந்து, பூட்டியபிறகு இந்த இடத்தைப் பிடித்துக் கொண்டேன். எட்டிமணியிலிருந்து தூங்குவதற்கு முயற்சிக்கிறேன். ஆனல், தூக்கம் தான்வரமாட்டேன் என்கிறது.

பக்கத்தில் எங்கோ பன்னிரண்டுமுறை அடித்து ஓய்ந்த மணியின் சப்தம் என் காதில் விழுந்தது. பின்னலிருந்த சுவரில் நன்ருகச் சாய்ந்து உட்கார்ந்தேன். தூங்குவதற்கு முயன்றேன். பசிக்கொடுமையும், குளிரின் வேதனையும் தூக்கத்தை விரட்டியடித்துக் கொண்டிருந்தன.

இன்று மட்டுமென்ன நான் எப்பொழுது பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருக்கத் தொடங்கினேனே அன்றுமுதல் நான் இன்னும் சரியாகத் தூங்கவில்லை. வீட்டில் இருக்கும்பொழுது படுக்கையில் படுத்தால் எனக்கொரு உத்தியோகம்இல்லாத கவலையும், என் தாய்தந்தையர் நமக்காகப்படும் துன்பத்தின் நினைவுகளும், படிப்பதற்குப் புத்தகங்கள் வாங்கக்கூட முடியாமல் வீட்டிலிருந்து ஏங்கிக்கொண்டிருக்கும் என் சகோதர சகோதரிகளின் ஏக்கம்நிறைந்த பார்வையும் என்கண்முன்னே தோன்றி என்னைத் தூங்கவிடாமல் செய்யும். கவலைகள்தானே தூக்கத்தின் பெரும் எதிரி. பிறகு எப்படித் தூங்குவது? இப்படி அவர்கள் அனுபவிக்கும் வேதனைகளைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமல்தான் நான் வீட்டைவிட்டு இவ்வளவுதூரம் ஓடிவந்து விட்டேன். அதுவும் இன்று காலையில்தான் இங்கே ஓடிவந்தேன். இப்பொழுது நான் இருக்கும் இடத்திற்கும், என் வீட்டுக்கும் சரியாக இருபதுமைல் தொலைவு.

எந்தய் எங்கே போகிறாய் என்று கேட்டதற்கு, இந்த ஊரில் என் நண்பன் ஒருவன் இருப்பதாகவும், அவன் எனக்கொரு வேலை பார்த்திருப்பதாகவும் கூறிவிட்டு இங்கு ஓடிவந்துவிட்டேன். ஆனல் இந்த ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் ஒருவருமே இல்லை. நான் இங்கு வரும்பொழுது என் தாய் யார்யாரின் காலில்விழுந்தோ எனக்கு 1ரூபா 25சதம் வாங்கிக் கொடுத்தார். அந்தப் பணம் என் பயணச் செலவுக்கே சரியாக இருந்தது.

நான் இங்குவரும்பொழுது ஒரு தீர்மானத்தோடுதான் வந்தேன். அதாவது இனியும் வேலை தேடிக்கொண்டு திரிவதில் பயனில்லை. அதிக உடல் உழைப்பு இல்லாமல் பெரும் தொகையான பணம் சம்பாதிக்கும் ஒரே தொழிலான 'களவு' தொழிலைச் செய்யலாமென்றுதான் இங்குவந்தேன்.

நான் காலை ஒன்பதுமணிக்கு இந்தஊரை அடைந்ததுமுதல் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து திரிந்தேன். ஆனல், பழக்கமில்லாத—பாவமான அந்தத் தொழிலைச் செய்வதற்கு என மனம் இடம்கொடுக்க வில்லை. நான் கற்றிருந்த கல்வியும் என் தாய் தந்தையர் எனக்குப் போதித்திருந்தபோதனைகளும் என் கைகளைக்கட்டிப் போட்டுவிட்டன.

நான்மட்டும் அந்தத்தொழிலைச் செய்திருந்தால் இப்படிப் பட்டினியாக இந்தக் கடையின் மூலையில் குளிரில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்க நேர்ந்திருக்காது. நன்ருக வயிறுமுட்டச்சாப்பிட்டுவிட்டு ஓர் ஒட்டல் அறையில் பஞ்சணை மெத்தையில் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன்.

நான் நேற்றுவரை பொறுமையோடு நல்லவனகத்தான் வாழ்ந்தேன். தினந்தோறும் கோவிலுக்குச்சென்று பூசை கண்டு, தேவநற்கருணைபெற்று தேவதாயிடமும் மன்றுடிக் கொண்டு மோட்சத்தின்பாதையில்தான் சென்றுகொண்டிருந்தேன். ஆனல், கடவுள்தான் என்முகத்தைப் பார்க்கவில்லை.

கோவில் பக்கமே திரும்பிப் பார்க்காதவர்கள் எப்படி எப்படியோ சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இக்காலம் தீயவர்களுக்கும், முரடர்களுக்கும்தான் வாழ்வளிக்கும். நல்லவர்கள் அவர்களைப் பார்த்து ஏங்கிஏங்கிச் சாகவேண்டியதுதான். தீயவழிகளில் சென்றால்தான் இலகுவில் பொருள் தேடலாம். பாவமோ புண்ணியமோ அதையெல்லாம் மறந்துவிட வேண்டும். நேற்றோடு கடவுள் பக்தியும் அவர் எண்ணமும் என்னிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டன. இனி கோவிலுக்குப் போகவோ பூசைப் பலிகளில் பங்குகொள்ளவோ மாட்டேன். மனதைக் கட்டிப் போட்டுவிட்டுக் கையை அவிழ்த்துவிட வேண்டியதுதான். இப்படி என் மனதில் பலவிதமான தீர்மானங்கள் உருவாகிக் கொண்டிருந்தன.

எங்கோ கோவிலில் ஒலித்த ஆலயமணியின் கணீர் கணீர் என்ற ஓசை என் காதுகளில் புகுந்து, என்னைத் திடுக்கிட்டு விழிக்கச் செய்தது. நான் தூங்கிவிட்டிருந்ததை உணர்ந்தேன். மணியின் ஓசை தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது. அது ஆறு மணிக்குக் கத்தோலிக்க கோவில்களில் ஒலிக்கப்படும் மணியின் ஓசையென்று அதன் சத்தத்தின் மூலம் அறிந்துகொண்டேன். மணியின் ஓசை என்னை விழித்தெழச்செய்து உலகிற்குப் பொழுது விடிந்ததை உணர்த்தியது. ஆனல், எனக்கெங்கே விடியப்போகிறது?

பக்கத்திலிருந்த குழாயில் முகம்கழுவினேன். பசியின் கொடுமை இப்பொழுது மிகக் கடுமையாக இருந்தது. நேற்றிலிருந்து பசியோடு இருந்தால் எப்படி இருக்கும்? நிரம்ப தண்ணீர் குடித்தேன். காய்ந்திருந்த வயிற்றில் குளிர்ந்த நீர்சென்றதும், வயிற்றுள் என்னவோ செய்தது. மயக்கம் வருவதைப்போலவும் இருந்தது. சிறிதுநேரம் கீழே உட்கார்ந்தேன். எங்கிருந்தோ ஒருநாய் ஓடிவந்தது. கடையின் மூலையிலிருந்த அழுக்குக் கூடையிலிருந்து ஒரு சோற்று இலையை இழுத்துக்கீழேபோட்டது. அந்த இலையில் எஞ்சியிருந்த சோற்றை உண்ணத் தொடங்கியது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த என்வாயில் உமிழ்நீர் மல்கியது.

இலேசாக எழுந்து நடந்தேன். எங்கே போவதென்றே எனக்குத் தெரியவில்லை. நான் அணிந்திருந்த ஆடைகள் மிகவும் அழுக்கடைந்து கசங்கிப் போய் இருந்தன. பஸ் நிறுத்தும் இடத்துக்குப் போனல்தான் என் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல் படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டு அந்த இடத்தைநோக்கி நடந்தேன். அப்பொழுது எனக்கு முன்னுல் நடுத்தர வயதுள்ள ஒருவர் வந்துகொண்டிருந்தார். அவரின் ஆடைகள் அவரை ஒரு பெரும பணக்காரர் என்று பறைசாற்றிக்கொண்டிருந்தன. அவர் அணிந்திருந்த சட்டைப் பையில் இருந்த பச்சைத்தாள் ஒன்று என்கண்ணிற் பட்டது. அவர் என்னைத் தாண்டிச்செல்லும்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அவரைப் பின் தொடர்ந்தேன். அவர் மிக அமைதியாக எனக்குமுன்னுல் சென்றுகொண்டிருந்தார். அவரின் வலதுகையில் ஒரு சிறிய கூடை தொங்கிக்கொண்டிருந்தது. சென்றுகொண்டிருந்தவர் ஒரு குறுக்குப் பாதைவழியாகச் செல்லத்தொடங்கினர். நானும் பின்தொடர்ந்தேன்.

சிறிதுநேரத்தில் கற்பாறைகளும், அழகிய மலர்ச்செடிகளும் நிறைந்த ஒரு பூஞ்சோலைக்கு அருகில் நான் வந்துவிட்டதை உணர்ந்தேன், பறவை இனங்களின் இனிய கீதங்களும், சலசலக்கும் அருவியின் ஒலியும் பலவித பூக்களின் இனிய நறுமணமும் என்னை மெய்மறக்கச் செய்தன. காலை வெய்யில் பாறைகளிலும் பச்சைப் புல்வெளிகளிலும் மலர்களின் மேலும் விழும் அந்தத் தோற்றத்தைக் காணும்பொழுது நான் ஏதோ ஓர் இன்ப புரியில் நின்றுகொண்டிருப்பதைப்போல் உணர்ந்தேன்.

எனக்குமுன்னுல் சென்றவர் ஒரு மரத்தடியில் முழந்தாளிட்டார். நான் அந்த மரத்துக்குப் பின்னுல் ஒளிந்துகொண்டேன். அவரின்வாய் ஏதேதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தது. என்னுடைய கைவிரல்களில் இரண்டு அவரின் சட்டைப் பையை நோக்கி நீண்டன. அவர் கண்களை மூடிக்கொண்டிருந்ததால் என்கையை அவர் கவனிக்கவில்லை. அப்பொழுது நான் தற்செயலாக என் தலையை உயர்த்தினேன். எனக்கு முன்னுல்......

(வளரும்)

# வேத போதக தேசிய இயக்குநரின் செய்தி

நண்பர்களே!

வழக்கம்போல எமது வருடாந்த பெரிய வேதபோதக தினம் அண்மிவிட்டது. இத்தினத்திலே உலகெங்கணுமுள்ள கத்தோலிக்கர் உள்ளமும் மனமும் ஒன்றுபட்டு திருச்சபையின் வேதபோதக பணியில் கருத்தைச் செலுத்துகிறார்கள். மற்றும் நாட்களில் ஒவ்வொருவரும் தத்தம் எண்ணத்தின்படி வேதபோதகக் கருத்துக்காகச் செபமும் தவமும் செய்கின்றனர். ஆனல் இத்தினத்திலோ உலகின் எந்த மூலை முடுக்கிலுமுள்ள சின்னஞ்சிறு கோயிலிலும், அலங்காரமான பேராலயங்களிலும், எல்லாக் கத்தோலிக்க உள்ளங்களிலும் இருப்பது ஒரே எண்ணமும் ஒரே செபமுமாம்.

அன்று நீங்களும் நானும் செய்யப்போவதென்ன? உலகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள மக்களின் பெருந்தன்மையாலும், தியாகத்தினுலும் ஏராளமாகப் பெற்றுள்ளநாம் செய்யப்போவதென்ன? இதுவே இவ் வேதபோதக ஞாயிறன்று எம்மை எதிர்நோக்கும் கேள்வியாகும். இறைவன் எமது பதிலுக்காகக் காத்திருக்கிறார்.

முதலாவதாக: மிஷன் ஞாயிறு பிறரது நன்மைத் தனத்துக்காக நாம் நன்றி செலுத்தும் நாளாகும். உலக மக்களின் காணிக்கைகளைத் திரட்டி, அவற்றைத் தேவைப்படும் இடங்களுக்கு விநியோகஞ் செய்வது தான் விசுவாசப் பரப்புதல் சபையின் பணியாகும். இவ்விதமாக நாம் இதுவரை அதிகம் பெற்றுள்ளோம் இன்னும் பெற்றுக் கொண்டேயிருக்கிறோம்.

இலங்கையில் செய்யப்பட்டுவரும் பணிகளைப் பாருங்கள். உதாரணமாக இன்று முதன்மையாகக் கருதப்படும் ஞானேபதேசப்பணி விசுவாசப் பரப்புதல் சபையின் உதவியாற்றுள் நடந்துவருகிறதென்பதை எத்தனைபேர் அறிவர். எல்லா அலுவலகங்களையும், ஞானேபதேச நடுநிலையங்களையும் நடத்தவும், ஆட்களைப் பயிற்றுவிக்கவும், உபகாரணங்களைப் பெறவும், மறையாசிரியர்களுக்கு வேதனமளிக்கும் வேண்டிய பொருளுதவியை இச்சபையே அளித்துவருகிறது. இதை அறிந்தவர் எத்தனைபேர்! ஞானேபதேசப்பணியில் ஈடுபட்டுள்ளவருள்ளும் எத்தனைபேர் தமது நன்கொடையாளரை நினைவுகூர்கின்றனர்?

இதுபோல் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். நாம் காட்டவேண்டிய நன்றிக்கடனை உணர்த்துவதற்கு இது ஒன்றே போதும். எனவே வேதபோதக ஞாயிறு நன்றிகூறும் நாளாகவும், பாப்பரசரின் பெயராலேயே இவையாவும் செய்யப்படுவதால் அவருக்கு எமது பிரமாணிக்கத்தைக் காட்டும் நாளாகவும் இருப்பதாக.

இரண்டாவதாக இஞ்ஞாயிறு எம்மைச் செபத்துக்கும், தியாகத்துக்கும், பெருந்தன்மைக்கும் மீண்டும் அர்ப்பணிக்கும் நாளாக இருக்க வேண்டியது அவசியமாகும். பிறர் தாம் வருந்தித் தியாகங்கள் செய்கையில் நாமும் அவ்வாறே செய்யவேண்டும். நாம் ஒரு தீவில் வாழ்ந்த போதிலும், கிறிஸ்தவனெவனும் ஒரு தீவாக வாழமுடியாது. திருச்சபை என்னும் குடும்பத்தில் செல்வரும் வறியோரும், கொடுப்போரும் பெறுவோரும், பழைமையான கிறிஸ்வத நாட்டினரும், புதிய வேதபோதக நாட்டினரும் எல்லாம் ஒரே ஒருமைப்பாட்டில் இணைந்தவர்கள் நாம். ஆகவே, வேதபோதகபணி நடைபெற நாமும் கொடுக்க வேண்டும்.

முதலாவதாக: எல்லாவற்றுக்கும்மேலாக எமது இடைவிடாத செபத்தின் காணிக்கை. திருச்சபையின் வேதபோதகத்துக்குச் செபமே முதன்மையாகத் தேவை.

இரண்டாவதாக: நாம் வருந்திச் செய்யும் தியாகங்கள். ஆயிரக்கணக்கான விதங்களில் இதைச் செய்யலாம். (நோய், துன்பம், குறைபாடுகள், பொறுப்புக்கள்) ஆனல், இது உண்மையான தியாகமாக இருக்கவேண்டும். சிலுவையிருந்தாலன்றி கிறிஸ்தவம் வளரமுடியாது.

மூன்ருவதாக: விசுவாசப் பரப்புதலுக்காக நாம் அளிக்கும் தருமம்.

பணக்கார நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது காணிக்கை மிகச் சிறிதாகத்தான் இருக்கும். கொடையின் அளவு முக்கியமல்ல. அதைத் தூண்டும் அன்பும், விசுவாசமும்தான் முக்கியம். இவை எம்மிடம் ஏராளமாக இருக்கவேண்டும்.

இவ்வருடம் விசுவாசப்பரப்புதல் ஞாயிறு அர்த்தம் செறிந்ததாகவும், நன்றியும் அர்ப்பணமும் பொருந்தியதாகவும் இருக்க வேண்டுமென்று நம்பிக்கையுடன் பிரார்த்திக்கிறேன். அனைத்துலக திருச்சபையிடமிருந்து உதவி பெற நீட்டிய எமது கரங்கள் செபத்தில் கூப்பிய கரங்களாக மாறவேண்டும்.

மொன்சிஞ்ஞோர்
மனிக் முத்துக்குமாரு

---

● பாத்திமா பதியிலே மாதாவின் காட்சிபெற்ற மூவருள்ளும் இன்னுமே உயிர் வாழ்ந்திருக்கும் சங். லூசி கன்னியாஸ்திரி ஒரு காலம் வசித்திருந்த பொன்ரேவெட்டு எனுமிடத்திலுள்ள ஸ்பானிய கன்னிகாமடத்தைப் பாத்திமாநாயகியின் பக்தியைப்பரப்பும் சர்வதேச இயக்கமான நீலச்சேனை வாங்கியிருக்கிறது. இஃது உலகில் பாத்திமா அன்னையின் பக்தியை விருத்திபண்ணும் ஒரு மத்தியதானமாக மாற்றியமைக்கப்படுகிறது. சங். லூசி இன்று ஒரு கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியாக இருந்து வருகின்றுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972-ம் ஆண்டுக்கான

# மறைக்கல்வித்தேர்வு மாதிரி வினுக்கள்

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2மணி.

### முதலாம் பாகம்

(அ) அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களிற் பொருத்தமான வற்றைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

(சப்பாவனை, திருமகனை, மரணமும், செங்கோல், மதியற்றவர், நெருப்புத் தூணுக, எல்லையற்றவர், கலியாண விருந்துக்கு, விசுவாசத்தை, ஒரேப்மலே).

1. ஞானஸ்நானத்தின்பொழுது நமது ஞானப்பெற்ருேர் வழியாக நமது............ வெளிப்படுத்துகிறேம்.
2. நீங்கள் வழிச் சந்திகளிலேபோய் காண்கிற யாவரையும் .........., அழைத்துக்கொண்டு வாருங்கள்
3. மோயீசன் தன் மந்தைகளை மிகத்தொலைவிற் கூட்டிச் சென்று............வரையும் வந்து சேர்ந்தார்.
4. கடவுளை அறியாத மனிதர் அனைவரும் ............... என்று சலமோன் சொல்லுகிருர்.
5. இஸ்ருயேலர் எகிப்தினின்றும் வெளியேறியபோது கடவுள் ஒரு ........... அவர்களுக்கு முன் வழிகாட்டிச் சென்ருர்.
6. வானமும், பூமியும் கடவுளை அடக்கிக்கொள்ள முடியாது. ஆகையால் கடவுள் ............
7. அவனவனுடைய கிரியைக்குத் தக்கபடியே கடவுள் அவனவனுக்கு .......... அளிப்பார்.
8. ஒரே மனிதனுலேயே பாவமும், பாவத்தினுலே ......... உலகில் நுழைந்தன.
9. சிதறிப் போனதைத்தேடி இரட்சிக்கவே தமது சொந்த .......... உலகிற்கு அனுப்பிவைத்தார்.
10. அனுப்பப்பட இருக்கிறவர் வருமளவும் ........... யூதாவை விட்டு நீங்குவதில்லை.

(ஆ) "அ" பகுதிக்குப் பொருத்தமான பகுதியை "ஆ" பகுதியிலிருந்து தெரிந்து அதன் இலக்கத்தை 'அ'பகுதிக் கோட்டில் எழுதுக.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. அமலஉற்பவி ............ | 1. மண்கூடயோட்டினிடம் |
| 2. அக்கினி நா.............. | 2. தோமையார் |
| 3. கொல்கொத்தா.......... | 3. எகிப்து |
| 4. வனுந்திரம்............. | 4. பரிசுத்த ஆவி |
| 5. சலமோன்.............. | 5. இறைவாக்கினர் |
| 6. என் ஆண்டவரே என் தேவனே .......... | 6. மகா பரிசுத்த கன்னி மரியம்மாள் |
| 7. இசையாஸ்.............. | 7. ஜெருசலேம் தேவாலயம் |
| 8. பார்வோன் மன்னன்... | 8. நெருப்புத்தூண் |
| 9. சிக்கார் ஊர் ............ | 9. காட்டு அத்திமரம் |
| 10. சக்கேயுஸ் ............ | 10. யாக்கோபின் கிணறு |

(இ) 'சரி' அல்லது 'பிழை, என்று மாத்திரம் எழுதுக.

1. காலத் தொடக்கத்தில் கடவுள் விண்ணையும், மண்ணையும் படைத்தார்.
2. உலகம் நித்தியமாய் இருந்தது.
3. ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் களிமண்ணினுல் உருவாக்கினுர்.
4. நம்முடைய சொந்தப் பாவங்களே நமக்கும், பிறருக்கும் துன்பத்தை விளைவிக்கின்றன.
5. கடவுள் தம்முடைய வெளியிடுதலின் வழியாக மேலான முறையில் தம்மை எமக்கு வெளிப்படுத்துகிருர்.
6. கடவுளின் திட்டப்படி நாம் ஆதாமிடமிருந்தே அருளுயிரைப் பெற்றிருக்க வேண்டும்.
7. கன்னிகையானவள் கர்ப்பமாகி ஒரு குமாரனைப் பெறுவாள் என்று முன்மொழிந்தவர் இசையாஸ் இறைவாக்கினர்.
8. வானமும், பூமியும் ஒழியாது; எனது வார்த்தைகளோ ஒழிந்துபோகும்.
9. என்னை அனுப்பியவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே எனக்குப் போசனம் என்ருர் யேசு.
10. வருந்திச் சுமை சுமக்கிறவர்களே என்னண்டை வாருங்கள்; நான் உங்களைத் தேற்றுவேன்என்று ஸ்நாபக அருளப்பர் போதித்தார்,

### இரண்டாம் பாகம்

(ஈ) சுருக்கமான விடைஎழுதுக.

1. கடவுள் யார்வழியாகத் தம்மை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிருர்?
2. கடவுள் தீமையை ஏன் அனுமதிக்கிருர்?
3. நம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களை அருள்வாழ்வுக்குப் பயனுள்ளவையாகச் செய்வது எவ்வாறு?
4. கடவுள் எதற்காகச் சம்மனசுகளை உண்டாக்கினுர்?
5. நமது முதற்பெற்ருேர் பாவத்தினுல் எவற்றை இழந்தனர்?
6. யேசுநாதர் கடவுளின் திருமகனும் மெய்யான கடவுளுமாய் இருக்கிருர் என்பதற்கான சான்றுகளெவை?
7. பரிசுத்த கன்னிமரியம்மாளுக்குக் கடவுள் அருளிய சிறந்த வரங்களெவை?
8. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை ஏன் பலிஎன்கிறேம்?
9. கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கு எதை அறிவிக்கின்றது?
10. தேவ அருள் நமக்கு அவசியமா?

(வரும்)

# சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

# பிரவேச விண்ணப்பம்—1973

பின்வரும் வகுப்புகளில் மாத்திரம் இடவசதியுண்டு

1 ஆம் வகுப்பு:

1967 ஆம் ஆண்டு தைமாதம் 31-ந்தேதியன்று அல்லது அதற்குமுன் பிறந்த பிள்ளைகள் அனுமதிக்கப்படுதற்கு உரித்துடையராவர்.

4 ஆம் வகுப்பு: 31-12-63.
9 ஆம் வகுப்பு: 31-12-58.
11 ஆம் வகுப்பு: 31-12-56.

அனுமதிகோரும்மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப்பின் பிறந்தவனுக இருத்தல் வேண்டும.

விண்ணப்ப பத்திரங்கள் 13-11-72-க்குமுன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் செய்யும் பத்திரங்கள் கல்லூரிக் காரியாலயத்தில் பள்ளிக்கூட நாட்களில் காலை 10-15இல் இருந்து 11-15 மட்டும் நேரில்வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

பிரவேசப் பரீட்சைத் தினம்: 25-11-72.

சுவாமி மதுரநாயகம்,
கல்லூரி அதிபர்.

19-10-72.

# ஜெயமளிக்கும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களடைந்து, நோய் பிணிதீர நன்மைகள் நிறைந்து, பாவம் அகன்றிடப் பக்தர்கள் நல்வழி நடந்து வருகின்றனர்.

மாதாவின் செபமாலை மகத்துவமுள்ள அருள்வாமளிக்கும் ஓர் ஏணி; அது பவக்கடல் தாண்டும் தோணி; இந்த அருள் நெறி அளிக்கும் ஏணியைப் பூவுலகில் வாழும் மானிடர்க்கு உவந்தளித்தார் வானவரின் இராணி. ஆதலாற் தேவஅன்னை உவந்து தந்த அருள்வழியாம் செபமாலையைக் குடும்பம், கோவில், பக்திக்கூட்டம், சமூகம் ஆகிய இவைகளின் மத்தியில் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் செபித்துத் தேவதாயின் களிகூர்ந்த, வியாகுல, ஆனந்த பரம இரகசியங்களை மனதினிற் பதிய நினைத்துப், பக்தியுடன் ஓதுவோம். அன்றியும் கிறீஸ்துவக் குப்பின் ஏகவிசுவாச ஆதாரமும், இரக்கத்தின் மாதாவும், சீவியத்திற்கு அடைக்கலமும், கிருபையின் பிரசன்னமுமாகிய தேவதாயின் மாசில்லாத இருதயத்திற்கு நிந்தைப்பரிகாரம் செய்யவும் அவ்வன்னையின் மகிமையைப் புகழ்ந்து கொண்டாடவும், உலகினிற் பகைமை நீங்கிச் சமாதானம் நிலவவும் தேவஅன்னை உவந்துதந்த செபமாலையைப் பயபக்தியுடன் செபித்துப் பேரருள் பெறுவோம்.

● லண்டன் நகரிலே வண. ஜோன் லூயீஸ் லூட்றவ் சுவாமியார் அன்ற வியாழக்கிழமை தனது 92-வது பிறந்த பெருநாளையும், மறுநாள் வெள்ளிக்கிழமை தம்முடைய குருத்துவ 60 ஆம்வருட வைரயூபிலியையும் கொண்டாடினுர். இவர் இன்று சற்றே கண்பார்வை குன்றியவராய் இருந்த போதிலும் தினமும் திவ்விய பூசை நிறைவேற்றியும், ஒழுங்காகப் பாவசங்கீர்த்தனம் கேட்டும் வருகின்ருர்.

# மறை பரப்பு ஞாயிறை முன்னிட்டு பரி. தந்தை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

விசேஷ பயிற்சி பெற்றிருப்பதால் அவ்வேலையின் போதனைப்பாகம் திருச்சபையின் வேலையாக அவர்கள் மூலம் நடந்து வருகின்றது. பொதுநிலை மக்கள் யாவரும் அவ்வேலையில் அவர்களுக்குத் துணைசெய்து வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். இதுவே நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் திருச்சித்தமாகும். சமீப காலத்திலிருந்த பல பாப்புமார்களும் அண்மையில் நடந்த 2-ம் வத்திக்கான் சங்கமும் இதை வற்புறுத்தி இருப்பதை பரி. தந்தையின் நிருபம் சுட்டிக் காட்டுகின்றது. திருச்சபையின் தன்மையாலும், யேசுக் கிறீஸ்துநாதரின் கட்டளையாலும் தான்பெற்ற நன்மையைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் திருமுழுக்கின் வழியாகத் திருச்சபையின்பிள்ளைகளாகின்றயாவரும்இவ்வேலையிலே பங்குபெற வேண்டியவர்களாகின்றனர். தன்தன் இயல்புக்கும ஆற்றலுக்கும் தக இக்கடமை செய்யப்பட வேண்டும். போதிக்கத் தகுந்தவர்கள் போதித்தும், எழுதத் தகுந்தவர்கள் எழுதியும், சரீர உதவி செய்யக்கூடியவர்கள் உடலுதவி அளித்தும், பணம் கொடுத்து உதவக்கூடியவர்கள் இயல்புக்குத் தக நல்மனதுடன் அதைக் கொடுத்தும், யாவரும் இவ்வேலையில் தமது கவனத்தையும் நேரத்தையும் செலுத்தி ஒவ்வொருவரும் செபத்தையும் தமது இக்கட்டு இடைஞ்சல் இன்பதுன்பங்கள் யாவற்றையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வேதப்பரப்புதல் வேலையில் ஈடுபடவேண்டுமென பரிசுத்த தந்தை தமது நிருபத்தில் கேட்டிருக்கின்ருர்.

## கத்தோலிக்க வானெலி நிகழ்ச்சிகள்

நாள் 22—10—72
நேரம்: மாலை 7 மணி.
நடாத்துபவர்:
மறைத்திரு. ஐஸ்ரஸ் சின்னப்பு, O. S. B.

நேரம்: மாலை 7-25 மணி.
"நேயர் நேரம்"
இதழ் 5.
நடாத்துபவர்: செல்வம்,
அ. ம. தி.

● தேவதாயாருடையவும், அதிதூதரான புனித மிக்கேலுடையவும் நாமந்தாங்கியதாய் 26 பேரைக்கொண்ட செபமாலைப் பட்டாளம் ஒன்று லண்டன் நகரிலே நவமாகத் திரட்டப்பட்டிருக்கிறது. விசாரணைப் பங்குகள் தோறும் சுற்றுப்பிரயாணஞ் செய்து, செபமாலை செபித்து, உலக சமாதானத்துக்காக மன்ருடிக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

✠

## 2-ம் வருட மரண நினைவு

**தெரேசம்மாள் குருஸ் அருளானந்தம்**

**மறைவு: 27-10-70.**

"இறைவா, உமது அளவு கடந்த கருணைக் கேற்ப உமது அடியாளாகிய இவளுக்கு நித்திய பேரின்பத்தை அருளியருளும்"

27-10-72-இல் பேசாலை, புனித வெற்றிநாயகி ஆலயத்தில் இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக பாடற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் ஆன்ம சாந்தியடைய வேணடுமாறு அனைவரையும் பணிவுடன் அழைக்கின்றேம்.

பிரிவினுல் துயருறும்:
தாய், கணவர், மக்கள், சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பேசாலை.

✠

## 4-ம் வருட மரண நினைவு

**பவுலீன் பல்தானு, ஆனந்தம் டயஸ்**

**மறைவு: 26-10-68.**

"இறைவா, உமது அளவு கடந்த கருணைக்கேற்ப உமது அடியாளாகிய இவளுக்கு நித்திய பேரின்பத்தை அருளியருளும்."

26-10-72-இல் பேசாலை, புனித வெற்றிநாயகி ஆலயத்தில் இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக பாடற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவருடைய ஆன்ம சாந்தியடைய வேண்டுமாறு அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றேம்.

பிரிவினுல் துயருறும்:
கணவர், மக்கள், மருமக்மள், சகோதரர், பேரப்பிள்ளைகள்.

பேசாலை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம்இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஞல ஐப்பசி மாதம் 21-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org